# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No.351/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மணி | த–பெ | உலகப்பன் |
| ஊர்: | : | கொத்தமங்களம் | சமயம்: | |
| வயது: | : | 77/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.06.2025**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் கொத்தமங்களத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். 05.10.2015 அன்று நான் எனது சம்மந்தி வீட்டிற்கு வந்திருந்தேன். அன்று இரவு 1.00 மணியளவில் வெளியே சென்ற அவர் சாலை விபத்தில் சிக்கிக்கொண்டதாக தெரிந்து கொண்டேன். விபத்து நடந்த இடத்தில் பள்ளத்துார் போலீசார் விசாரணை செய்து படம் வரைந்து மகஜர் ஆவணம் ஒன்று தயார் செய்தார்கள். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.2**. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

இந்த விபத்தில் இறந்த நபர் எனது சம்மந்தி என்றால் சரிதான். எனது சம்மந்தி என்பதால் நான் காவல் நிலையம் சென்று கையெழுத்து செய்தேனா என்றால் இல்லை. நான் பள்ளத்துார் காவல் நிலையம் சென்று கையெழுத்து போடவில்லை. அதில் என்ன விசயங்கள் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் செய்தேன். இறந்த நபர் எனது உறவினர் என்பதால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.06.11 12:33:27 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.351/2022 P.W.6**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நாகராஜ் | த–பெ | முருகேசன் |
| ஊர்: | : | வடகுடி | சமயம்: | |
| வயது: | : | 53/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | தனியார் நிறுவனத்தில் வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.06.2025**

**எதிரி ஆஜர்**.

------------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் வடகுடியில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். 2015 ம் வருடம் 10 ம் தேதி 5 ம் மாதம் பள்ளத்துார் சென்று விட்டு வந்து கொண்டிருந்தேன். அப்போது எனக்கு தெரிந்த முத்தையா என்பவருக்கு பள்ளத்துார் மனச்சை என்னும் இடத்தில் இந்த சாலையில் பேருந்து ஒன்று மோதி விபத்தை ஏற்ப்படுத்தியதாக தெரிந்து கொண்டேன். பின்னர் சிகிச்சைக்காக மரூத்துமனை அழைத்து சென்றார்கள். பின்னர் சம்பவயிடம் வந்து போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் அந்த ஆவணத்தில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ 3**.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலீஸ் விசாரணையிலும் சொல்லியிருக்கிறேன். நான் காவல் நிலையத்தில் சென்று கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.06.11 12:33:34 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி